# மஹரகம நகர சபை
# கொழும்பு மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 ஜுலை 09 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 ஜுலை 06 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 டிசெம்பர் 11 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மஹரகம நகர சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் ரூபா 435,388 க்குக் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்படவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டில் யப்பானின் கவசாதி ரொட்டரி கழகத்தின் நன்கொடையாகப் பெறப்பட்ட நிசான் காபேஜ் டிரக் வண்டியின் பெறுமதியாகிய ரூபா 2,400,000 (விலை மதிப்புப் பெறுமதி) மூலதனமாக்கப்படவில்லை. இதற்கெனச் செலவாகிய ஆரம்பச் செலவினமாகிய ரூபா 337,583 மூலதனமாக்கப்படவுமில்லை.

(இ) மூலதனப் பயன்பாட்டிற்கு வருவாய் உதவுதொகையாகும் கணக்கு மீதியானது நிலையான சொத்துக்களது மீதியைவிட ரூபா 5,534.481 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) வங்கியிலிருந்து பெறப்பட்ட மீதிகளை உறுதிசெய்யும் கடிதத்தின் பிரகாரம், பெறவேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 2,729,217 ஆகும். எனினும், வட்டியாகக் கணக்கிலிடப்பட்ட தொகை ரூபா 19,128,594 ஆகும்.

(உ) முத்திரைத் தீர்வை வருவாயாக 2011 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட ஆண்டுகளில் பெறப்பட வேண்டிய ரூபா 79,050,816 கணக்குகளில் காட்டப்படவில்லை.

### 1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பத்தொன்பது கணக்கீட்டு விடயங்களது கட்டுப்பாட்டுக் கணக்கின் படியான மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 346,567,164 ஆகும். அக்கணக்கு மீதிகளது கூட்டுத்தொகை உப பதிவேடுகளின் பிரகாரம் ரூபா 270,470,578 ஆகவிருந்தது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையால் 3 கணக்கு மீதிகளது கூட்டுத்தொகையாகிய ரூபா 95,637,088 கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாது போயிற்று.

### 1.3.4 தீர்த்து வைக்கப்படாத கணக்குகள்

ஐந்து கணக்கீட்டு விடயங்களது ரூபா 7,057,279 மீதியைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 58,591,545 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 37,003,872 ஆகும்.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

### 2.2.1 வங்கிக் கணக்குகள்

(அ) காசேட்டின் பிரகாரம், 2011 ஜனவரி 01 இல் உள்ளவாறான வங்கி மேலதிகப்பற்று ரூபா 76,614,080 ஆகும். 2011 ஆம் ஆண்டிற்கான காசேடு பேணப்படாமையால், மீதிகளை அவதானிக்க முடியாது போனாலும் கணக்காளரால் 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா ரூபா 53,482,956 மேலதிகப் பற்று மீதி உள்ளது என விபரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும், சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம் மேலதிகப் பற்று மீதி ரூபா 43,355,501 ஆகும்.

(ஆ) நடைமுறைக் கணக்கு ஒன்றினது 2010 ஜனவரி முதல் 2011 டிசெம்பர் வரையான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகள் இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 395(இ) க்கமைய 2012 ஆகஸ்ட் 24 அந் திகதியளவிலும் தயாரிக்கப்படாதிருந்தன.

(இ) வழங்கப்பட்டு, 6 மாதங்களுக்குள் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 100,029 கூட்டுத்தொகையுடைய 20 காசோலைகள் சம்பந்தமாக இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 396 க்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) 2011 மார்ச் 03 மற்றும் நவெம்பர் 01 ஆந் திகதியன்று வைப்பிலிடப்பட்ட முறையே ரூபா 16,162 ரூபா 92,472 க்கான 02 காசோலைகள் மற்றும் ரூபா 18,425 கூட்டுத்தொகையுடைய 07 காசுக் கட்டளைகள் என்பன தேறாதிருந்தபோதும் அது தொடர்பாகத் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், நிலுவையாக உள்ள வருவாய் என்பன

(அ) தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது (விலைப்பட்டியல்) | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிதியம் |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 81,700 | 79,262 | 90,277 |
| (ii) | குத்தகை வாடகை | 6,410 | 8,925 | 3,699 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,099 | 979 | 1,587 |
| (iv) | பிற வருவாய் | 117,352 | 123,923 | 134,499 |

(ஆ) 2010 ஆம் ஆண்டைவிட 2011 ஆம் ஆண்டில் தீர்வையும் வரியும் ரூபா 1,600,000 குறைவாக மதிப்பிடப்பட்டிருந்தது.

(இ) குத்தகை வாடகை வருவாயைக் கணிப்பிடுகையில் உள்ளபடியான வருவாய் கவனத்திற் கொள்ளப்படாதிருந்தது.

### 2.3.2 விளம்பரப் பலகைக் கட்டணம்

2011 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் விளம்பரப் பலகைகள் மூலமான ரூபா 939,122 நகர சபைகள் கட்டளைச் சட்டம் (255 ஆம் அத்தியாயம்) 162(1) பிரிவின் பிரகாரம் அறவிடப்படாதிருந்தது.

### 2.3.3 இறைச்சிக் கடை வரி

குத்தகைக்கு வழங்கப்பட்ட இறைச்சிக் கடைகளிலிருந்து 2002 முதல் 2011 வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 1,842,023 வரியானது அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2.4 சொத்து முகாமைத்துவம்

### 2.4.1 அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்

2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன் முற்பணக் கூட்டுத்தொகை ரூபா 31,136,042 ஆகும். நெடுங்காலமாக அறவிடப்படாதிருக்கும்

ஊழியர் கடன் மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 372,721 ஆகும். தகவல்களின் பொழிப்பு கீழே காணப்படுகின்றது.

| விபரம் | ஊழியர் எண்ணிக்கை | அறவிடப்பவேண்டிய தொகை |
|---|---|---|
| | | ரூபா |
| சேவை நீங்குதல் | 56 | 146,377 |
| மரணமுற்றோர் | 22 | 100,166 |
| ஓய்வுபெறுதல் | 03 | 99,187 |
| வேலை இடமாற்றம் | 02 | 26,991 |
| | 83 | 372,721 |

## 2.4.2 பெற வேண்டிய கணக்குகள்

(அ) 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 230,226,215 ஆகும். காலப் பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட வில்லை.

(ஆ) இலங்கை மின்சார (தனியார்) சபைப் பங்கு மூலதன முதலீடாகிய ரூபா 5,505,190 க்கு 2006 ஆம் ஆண்டு தொடக்கம் பங்கிலாபம் எதுவும் கிடைக்கவில்லை.

## 2.5 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1971 ஜுலை 26 ஆந் திகதிய 810 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் சம்பளமற்ற லிவிற்காக ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை குறித்த மாதத்திலோ அல்லது அதனையடுத்துவரும் மாதத்திலோ அறவிடப்பட வேண்டுமாயினும், 2011 ஆம் ஆண்டில் அறவிடப்பட வேண்டிய ரூபா 708,095 தொகையானது 2012 ஆகஸ்ட் 24 ஆந் திகதியளவிலும் அறவிடப்படாதிருந்தது.

(ஆ) திட்டங்களை அங்கீகரிப்பதன் மூலமும் அத்துமீறிய நிர்மாணிப்புகளை அகற்றுவதன் மூலமும் சபை ஈட்டிய வருவாயில் நகர்ப்புற அபிவிருத்தி அதிகார சபைக்கு 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் கொடுப்பனவு செய்யவேண்டிய ரூபா 3,746,387 சபையின் நடைமுறைக் கணக்கில் 2012 ஆகஸ்ட் 24 ஆந் திகதியன்றும் காணப்பட்டது.

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

(அ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 133(1) மற்றும் (2) என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்படவில்லை.

(ஆ) உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு
(இ) உள்ளகக் கணக்காய்வு
(ஈ) நிதிக் கட்டுப்பாடு
(உ) கையிருப்புக் கட்டுப்பாடு
(ஊ) வருவாய் நிர்வாகம்
(எ) சொத்து முகாமைத்துவம்
(ஏ) கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஐ) மனிதவள முகாமைத்துவம்